2011 பிப்ரவரி 8]

மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைக் கூறினார்கள். இருதய அறுவை சிகிச்சை என்றால் சென்னை, திருச்சி அல்லது கோயம்புத்தூர் என்று இருந்தது. பரவலாக மாவட்டந்தோறும் இந்த மருத்துவ வசதிகள் இந்தத் திட்டத்தின்மூலமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. கடலூரில் இந்தத் திட்டத்தின்மூலம் செய்வார்கள். அதுபோல தஞ்சாவூரில் செய்கிறார்கள். தனியார் மருத்துவமனைகளை இந்தத் திட்டத்தின் மூலமாக விரிவாக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதற்கென்று கடன் எதுவும் தரவேண்டியதில்லை. அந்த மருத்துவர்களே செய்துகொண்டிருக்கிறார்கள். இருதய அறுவை சிகிச்சை என்றால் சென்னைக்கு வரக்கூடிய சூழ்நிலை இருந்தது. இப்போது திருச்சியில் செய்கிறார்கள். தஞ்சாவூரில் செய்கிறார்கள். மாவட்டந்தோறும் பிற்காலத்தில் வரக்கூடிய வாய்ப்புகள் இதனால் உருவாக்கப்பட இருக்கின்றன. இந்தத் திட்டத்தின்மூலமாகப் பல புரட்சிகளைச் செய்துகொண்டிருக்கின்றோம். இந்தத் திட்டத்தில் இருதய நோய் மட்டுமல்ல, எலும்பு முறிவு சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. இருதய நோய் சம்பந்தமாக 23,767 நபர்களும், எலும்பு முறிவு சிகிச்சைக்காக 56,484 நபர்களும், சிறுநீரக சிகிச்சைக்காக 30,988 நபர்களும், நரம்பியல் சிகிச்சைக்காக 16,473 நபர்களும் பயன் அடைந்துள்ளார்கள். புற்றுநோய் சிகிக்சைக்காக 48,098 நபர்களும் இந்தத் திட்டத்தின்மூலம் பயன் பெற்றுள்ளார்கள் என்ற செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

தரம் உயர்த்துதல்

***106576—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2011 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் கால்நடை மருந்தகத்தை, மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், சீக்கிரம் சொல்லுங்கள், நேரம் ஆகிவிட்டது.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், 49 ஊராட்சிகளைக் கொண்டது. இந்த ஒன்றியத்தில் வேளாண்மைக்கு அடுத்ததாக சாதாரண, ஏழையெளிய விவசாயிகளுக்கு வருமானம் வரக்கூடிய தொழில் என்பது கால்நடை வளர்ப்புதான். அந்த வகையில் மிகப் பெரிய ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனை கிடையாது. 3 மருந்தகங்கள்தான் இருக்கின்றன. ஆகவே கால்நடைகளுக்கு வரக்கூடிய நோய்களுக்குச் சிகிச்சை பெற கோட்டூரில் இருக்கக்கூடிய மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி போதுமான மருத்துவர்களை நியமித்து, கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையால் குறிப்பிடப்படும் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, அப்பகுதியில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவை ஏற்படுத்தப்படுகின்றன. ஒரு கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-க்கு மேல் இருக்குமானால் அங்கு ஒரு கால்நடைக் கிளை நிலையமும், 10,000-க்கு மேல் எண்ணிக்கை இருக்குமானால், கால்நடை மருந்தகமும் அமைத்துத் தரப்படுகின்றன. கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கோரும்

2011 பிப்ரவரி 8]

இடத்திற்கும், ஏற்கெனவே அந்தப் பகுதியில் செயல்பட்டு வரும் கால்நடைக் கிளை நிலையத்திற்கும் இடையே 5 கி.மீ. தொலைவு இருத்தல் வேண்டும். கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமாயின், அப்பகுதிக்கும் அதன் அருகில் செயல்பட்டு வரும் கால்நடைக் கிளை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 8 கி.மீ. இருக்க வேண்டும். கால்நடை மருத்துவமனை தொடங்கப்படவேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் கூடுதலாக இருத்தல் வேண்டும். கால்நடைக் கிளை நிலையம் முதலில் தொடங்கப்பட்டு, பின்னர் தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக உயர்த்தப்படுகிறது. ஆனால், கோட்டூர் கால்நடை மருந்தகத்தில் தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை சராசரியாக 30 மட்டுமே உள்ளது. 2009-2010, 2010-2011 ஆகிய ஆண்டிற்கான அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் கால்நடைக் கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு இடம்பெறாததாலும் கோட்டூர் கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை கால்நடைப் பண்ணை என்பது தமிழகத்திலேயே பிரசித்திபெற்ற கால்நடைப் பண்ணையாகும். சுமார் 300 ஏக்கர் விளைநிலங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய கால்நடைப் பண்ணை. அந்தப் பண்ணையில் இருக்கக்கூடிய உம்பளச்சேரி இனம் என்பது, அண்டை மாநிலங்களில் நடைபெறுகின்ற போட்டிகளிலெல்லாம் கலந்துகொண்டு பரிசைப் பெற்றுவரக்கூடிய காளைகள். அந்த இனம் தற்சமயம் அழிந்துவரும் நிலையில் இருக்கிறது. ஆகவே, அந்தக் கால்நடைப் பண்ணையை கால்நடை மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2011 பிப்ரவரி 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில் கால்நடைகளை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிதாக 100 கால்நடைக் கிளை நிலையங்களைத் துவக்குவதற்கும், 200 கால்நடைக் கிளை நிலையங்களைத் தரம் உயர்த்தி, கால்நடை மருந்தகங்களாக உயர்த்துவதற்கும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். மேலும், ஏராளமான காலிப் பணியிடங்களில் பணியாளர்களை நியமித்திருக்கிறார்கள். கொருக்கை கால்நடைப் பண்ணையின் மேம்பாட்டினைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அக்கறையோடு சொன்னார்கள். எதிர்காலத்திலே அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

26—

நியாய விலைக் கடை

***121689—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, அல்லிக்குண்டம் ஊராட்சி, பொம்மன்பட்டியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில், அல்லிகுண்டம் என்கிற பொது விநியோகக் கடையிலே 1,033 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதிலிருந்து பிரித்து ஏற்கெனவே பெருமாள்கோவில்பட்டி என்கிற ஊருக்கு 210 குடும்ப அட்டைகளைக்கொண்டு ஒரு பகுதிநேரக் கடை